செய்தி வெளியீடு எண்:126 நாள்:15.02.2021

# செய்தி வெளியீடு

## சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 12 (2வது சுற்று) மாநில அளவு அதிகார மேம்பாட்டுக் குழு நடைபெற்ற நாள்– 15.02.2021. 11.00 முற்பகல்

தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கொள்கை குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்களின் தலைமையில் 15.02.2021 அன்று காலை 11.00 மணியளவில்12 வது மாநில அளவு அதிகார மேம்பாட்டுக் குழுக் கூட்டம் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவில், காணொளி வழியாக நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருமதி. ஜெயஸ்ரீ ரகுநந்தன், இஆப., அரசு கூடுதல் தலைமை செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, டாக்டர் சந்தீப் சக்சேனா, இஆப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, திரு. கயரத் மோகன் தாஸ், இவப., முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (சமூகக்காடுகள் மற்றும் வனவிரிவாக்கம்), திருமதி. பி. ராஜேஸ்வரி, இவப., கூடுதல் தலைமை முதன்மை வனப்பாதுகாவலர் (திட்டம் மற்றும் வரவு செலவு), திருமதி. ஷில்பா பிராபாகர் சதிஷ், இஆப., அரசு இணைச் செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, திரு. எஸ். ராமநாதன், அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறை, திருமதி. ஆர். புவனேஸ்வரி, அரசு துணைச் செயலாளர், நிதித்துறை, முனைவர். பு.செ. அர்ச்சனா கல்யாணி, இ.வ.ப., குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு), சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் அலகு–2, மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு மற்றும் திருமதி. கே.எம். சரயு, இ.ஆ.ப., திட்ட இயக்குநர், சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் அலகு–1, உதகமண்டலம், மாவட்ட வன அலுவலர்கள் / துணை இயக்குநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிதியாண்டில் (2020–21) 12 (2வது சுற்று) மாநில அளவிலான அதிகாரக்குழுக் கூட்டத்திற்கு ரூ. 3065.179 இலட்சத்தில் 113 திட்டங்கள், பரிந்துரைக்கு முன்வைக்கப்பட்டு ஆலோசிக்கப்பட்டது. அப்போது, மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் கோவிட்–19 அவசர காலத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தலைமையில் இந்த அரசு நிர்வாகச் செலவைக் கணிசமாகக் குறைத்துள்ளது, இருப்பினும் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற மேம்பாட்டுத் திட்டத்திற்கு முழுத் தொகையான ரூ.75 கோடி இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் கூறுகையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் தலைவராக உள்ள நிலையில் கோவிட்–19 அவசர காலத்தில் சுகாதார திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாதவும் குறிப்பாக, சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் முதல் முறையாக சுகாதார துறை சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மேலும் இவ்வாண்டு ரூ.13.6 கோடி மதிப்பிலான திட்டங்கள் சுகாதார துறைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் பெருமளவில் பயனடைய வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சரின் நோக்கம், அதன்படி சமூகத்திற்கு பெருமளவில் பயனளிக்க சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு துணைத்தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்

இக்கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட முக்கிய திட்டங்களாவன சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்கள், காடு வளர்ப்பு, குடிநீர் மற்றும் வடிகால், மனித விலங்கு மோதல், மண் மற்றும் நீர் பாதுகாப்பு.

சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக ஒரு ‘கண்காணிப்பு பலகை’ உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் ஆன்லைன் செயல்முறை மூலம் திட்டங்களின் செயலாக்கம் மற்றும் மதிப்பீடு செய்யப்படுகிறது. மேலும், சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான திட்டங்களைத் திறம்பட மற்றும் விரைவாக கண்காணிப்பதற்காக வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது என மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் மாண்புமிகு துணைத் தலைவர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தெரிவித்தார்.

**திரு.சி. பொன்னையன்,**
**மாண்புமிகு துணைத் தலைவர்,**
**மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**